**தங்காலை நகர சபை**
**அம்பாந்தோட்டை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் நிதிக்கூற்றுக்கள் 2014 யூலை 14 ஆந் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 23 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தங்காலை நகர சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

2010 சனவரி 19 ஆந் திகதிய PED/54 ஆம் இலக்க பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின்படி 2011 சனவரி 01 ஆந் திகதி முதல் உள்ளூராட்சி நிறுவனங்களினால் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த நியமங்கள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) உள்ளூராட்சி ஓய்வூதியப் பங்களிப்புப் பணத்திற்காக 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 4,378,602 கடன்கொடுத்தோர் ஒதுக்கம் செய்யப்பட்டிருந்த போதிலும், மாகாண அரசாங்க சேவை ஓய்வூதிய பங்களிப்புப் பட்டியலின் படி அது ரூபா 4,432,486 ஆக இருந்தது. அதன் படி ரூபா 53,884 தொகை குறைத்து ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2011 ஆம் ஆண்டிற்காக செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணத்திற்காக மீளாய்வாண்டின் செப்தெம்பர் 10 ஆந் திகதி ரூபா 85,135 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அது மீண்டும் கடன்கொடுத்தோர் ஏற்படுத்தப்பட்டு தீர்க்கப்பட்டிருந்ததுடன் பழைய கடன்கொடுத்தோர் ஒதுக்கீடுகள் ரூபா 50,000 அவ்வாறே கணக்குகளில் முன்கொண்டு வரப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்குரிய நிலையான வைப்பு வட்டி கணிப்பீடு செய்யும் போது கணக்குக் காலப்பகுதி கவனத்திற்கு கொள்ளப்படாது கணக்கு வைத்தமையால் ரூபா 30,186 வட்டி வருமானம் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) 54 நாட்குறிப்புப் பதிவுகளின் வருமானச் செலவினக் கணக்கில் ரூபா 50,134,585 தொகை வரவு வைக்கப்பட்டு 04 கணக்கு விடயங்களில் ரூபா 49,967,353 ஆக செலவு வைத்தமையால் ரூபா 167,232 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(உ) மீளாய்வாண்டிற்குரிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 3,250,580 ஆக இருந்த போதிலும் 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதம் வரையான காலத்திற்குரிய மீளாய்வாண்டின் போது காசாகப் பெறப்பட்ட வருமானம் மற்றும் 2013 ஆம் ஆண்டிற்காக கடன்பட்டோர் நிதியேற்பாடாக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடுகளின்

கூட்டுத்தொகையான ரூபா 4,752,330 வருமானச் செலவினக் கணக்கில் செலவு வைக்கப்பட்டு அந்த வருமானம் ரூபா 1,501,750 தொகை அதிகரித்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஊ) ஐந்தொகையில் நானாவிதக் கடன்பட்டோர் மீதியில் 2006, 2007, 2008, 2009 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளுக்காக ரூபா 2,192,066 கூட்டுத்தொகை முத்திரைக் கட்டணமாக கிடைக்க வேண்டியமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறான தொகையொன்று முத்திரைக் கட்டணமாக கிடைக்க வேண்டியமை அறிக்கையின்படி அவதானிக்கப்படவில்லை.

(எ) மீளாய்வாண்டின் ஐந்தொகையில் நானாவிதக் கடன்பட்டோரின் கீழ் 2012 ஆம் ஆண்டிற்காக தென் மாகாண சபையிலிருந்து ரூபா 3,700,475 தொகையொன்று கிடைக்க வேண்டியதாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2012 ஆம் ஆண்டிற்குரிய கிடைக்க வேண்டிய சகல பணமும் 2013 ஆம் ஆண்டின் போது கிடைத்திருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையில் தென் மாகாண சபையிலிருந்து 2013 ஆம் ஆண்டிற்காக ரூபா 1,780,300 தொகை முத்திரைக் கட்டணமாகக் கிடைக்க வேண்டியிருந்த போதிலும் ரூபா 363,000 தொகை மாத்திரம் நானாவித கடன்பட்டோரின் கீழ் ஐந்தொகையில் காண்பிக்கப்பட்டமையால் நானாவிதக் கடன்பட்டோரில் ரூபா 1,417,300 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டிற்காக வீதி விளக்குகளைப் பராமரிப்பதற்காக இலங்கை மின்சார சபையிலிருந்து 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 45,636 தொகையொன்று மீள்நிரப்புச் செய்ய வேண்டியிருந்த போதிலும் அது ஐந்தொகையில் கடன்பட்டோரின் கீழ் காண்பிக்கப்படாதிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டிற்காக வீதி விளக்குகளைப் பராமரிக்கும் நடவடிக்கைகளுக்காக ரூபா 34,227 தொகையொன்று கிடைக்க வேண்டியதாக ஐந்தொகையில் நானாவிதக் கடன்பட்டோரின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அத்தொகை 2013 பெப்ரவரி 26 ஆந் திகதிய 13078 ஆம் இலக்க அடியிதழின்படி கிடைத்திருந்தது.

(ஐ) ஐந்தொகையில் கடன்பட்டோரின் கீழ் 2005 முதல் 2009 வரையான ஆண்டுகளுக்காக வீதி விளக்கு பராமரிக்கும் நடவடிக்கைகளுக்காக கிடைக்கவேண்டியதாக ரூபா 500,113 கூட்டுத்தொகை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறான தொகையொன்று கிடைக்க வேண்டியமை பதிவேட்டிலோ அல்லது கோவைகளின்படியோ அவதானிக்கப்படவில்லை.

(ஓ) 2012 ஆம் ஆண்டிற்காக பெறுமதி சேர்வரியாக ரூபா 197,357 தொகையொன்று ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 146,403 தொகை மாத்திரம் 2012 ஆம் ஆண்டிற்குரிய பெறுமதி சேர் வரியாக அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. மேலதிகமாக ஒதுக்கப்பட்ட ரூபா 50,954 பெறுமதிக்காக சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்ட இரண்டு கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் மீதி மற்றும் அதற்குரிய பட்டோலைகள்/ உபயோகப் பதிவேடுகளுக்கிடையே ரூபா 1,512,501 தொகையான இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 812,559 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,334,044 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| i. | வீதவரியும் வரியும் | 2,600 | 2,779 | 2,274 |
| ii. | வாடகை | 8,674 | 5,796 | 7,225 |
| iii. | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 542 | 347 | 24 |
| iv. | ஏனைய வருமானம் | 83,798 | 41,503 | 10,694 |

### 2.2.2 ஆதன வரி

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவை ஆதனவரித் தொகை ரூபா 2,190,732 ஆக இருந்ததுடன் நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் 170(அ) பிரிவின் படி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. தலைவரினால் 2014 திசெம்பர் 05 ஆந் திகதிய பதில் கடிதத்தில் மேற்கூறப்பட்ட நிலுவையில் ரூபா 494,083 தொகை அறவிடப்பட்டதாக எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 கடை வாடகை

**3.** மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2010 திசெம்பர் 27 ஆந் திகதிய தபபா/2010/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின்படி மதிப்பீட்டாளர் ஒருவரை வரவழைத்து பெறப்பட்ட மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு சகல கடைகளுக்காகவும் கடை வாடகைப் பணம் தீர்மானிக்கப்பட வேண்டிய போதிலும், சபைக்குச் சொந்தமான 54 கடைகளுக்காக வாடகைப் பணம் தீர்மானிக்கப்பட்ட முறை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. அவ்வாறே உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட மாதாந்த வாடகைப் பணத்திற்கும் தற்போது அறவிடப்படுகின்ற வாடகைப் பணத்திற்கும் இடையே வேறுபாடுகளும் காணப்பட்டன.

ii. மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின்படி சகல உடன்படிக்கைகளும் 03 வருடங்களுக்கு ஒரு  டைவ நாளதுவரையாக்கப்பட வேண்டிய போதிலும் சபைக்குச் சொந்தமான கடைகள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

iii. மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் 11 ஆம் பந்தியின்படி வாடகையாளர் வேறு தரப்பினருக்கு வாடகைக்கு வழங்கும் உரித்தை கையளித்தல் சபையின் அங்கீகாரமின்றி மேற்கொள்ளப்பட முடியாதிருந்த போதிலும் சபைக்குச் சொந்தமான கடைகளில் அனேகமானவைகளில் வியாபார நடவடிக்கை வாடகையாளர் தவிர்த்த ஏனைய தரப்பினரால் மேற்கொள்ளப்படுகின்றமை கோவைகளின் படி அவதானிக்கப்பட்டது.

iv. மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் 09 ஆம் இலக்க பந்தியின் படி வாடகையாளரின் கோரிக்கையின்படி அல்லது வாடகையாளர் மரணித்த சந்தர்ப்பத்தின் போது வாடகை உரித்து கையளிக்க முடியுமான போதிலும் உடன்படிக்கை கைச்சாத்திட்டு வாடகை உரித்து உரிய நபருக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

v. தங்கலை பஸ் நிலைய வியாபாரத் தொகுதியில் அமைந்துள்ள 24 கடைகள் இலங்கை மீன்பிடித் துறைமுக கூட்டுத்தாபனத்தினால் 2008 ஆம் ஆண்டின் போது நகர சபைக்கு

கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அந்தக் கடைகள் மதிப்பீடு செய்து கடை வாடகைப் பணத்தை தீர்மானித்து அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாதிருந்ததுடன் 2011 செப்தெம்பர் மாதம் வரையில் ரூபா 179,336 கூட்டுத்தொகையான பழைய நிலுவைப் பணம் அறவிட வேண்டியிருந்தது.

### 2.2.4 வாடிவீட்டு வாடகை

நகர சபைக்குச் சொந்தமான வாடிவீடுகள் நகர அபிவிருத்தி அதிகாரசபை வாடகைக்குப் பெற்றிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடவேண்டிய மொத்தத் தொகை ரூபா 3,131,012 ஆக இருந்தது. வாடகையாளருடன் சபை உடன்படிக்கை கைச்சாத்திட்டிருக்கவில்லை. வருடாந்தம் நகர சபைக்கு அறவிடவேண்டிய வாடகைப் பணங்களின் கூட்டுத்தொகை வருடாவருடம் அதிகரித்திருந்த போதிலும் அந்த வாடகைப் பணத்தை அறவிடுவதற்காக நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் 170அ(1) பிரிவின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்வகில்லை. தலைவரினால் 2014 திசெம்பர் 05 ஆந் திகதி பதில் கடிதத்தில் மேற்கூறப்பட்ட நிலுவையில் ரூபா 471,500 தொகை நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் ஒரு தரப்பினராக வாடகை வீதத்தை குறைக்கும் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட அதிகரித்து பற்றுச்சீட்டிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

### 2.2.5 காணி வாடகை

ஒரு குறிப்பிட்ட தரப்பினருக்கு ரூபா 300 தொகையில் நகர சபைக்கு அருகிலுள்ள நிலக்கூறுகள் 1983 ஆகஸ்ட் 18 ஆந் திகதி உடன்படிக்கையின்படி வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் சபையினால் பேணப்பட்ட கோவையின்படி அந்த இடத்தில் புதிய நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டு குடியிருக்கின்றமை உறுதிப்படுத்தப்பட்டது. இதன் காரணமாக உடன்படிக்கை நாளதுவரையாக்கப்பட்டு காணிகளை வாடகைக்கு வழங்குதல் முறையாக மேற்கொள்ளப்படாமையின் அடிப்படையில் சபையின் காணி மற்றும் ஆதனங்கள் முறையற்ற வகையில் பாவனைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தமையும், காணியைக் கையேற்பதற்கு சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

### 2.2.6 அனுமதிப்பத்திரக் கட்டணம்

நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 162(1) ஆம் பிரிவின்படி அனுமதிப்பத்திரக் கட்டணம் விதித்து அறவிடப்படாமையினால் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 23,000 கூட்டுத்தொகையான நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணம் காணப்பட்டது. தலைவரினால் 2014 திசெம்பர் 05 ஆந் திகதிய பதில் கடிதத்தில் மேற்கூறப்பட்ட நிலுவையில் ரூபா 14,000 அறவிடப்பட்டதாக எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

### 2.2.7 ஏனைய வருமானம்

சபையினால் தீயணைப்பு வாகனத்தின் சேவை வழங்குவதற்காக ஒரு கிலோ மீற்றருக்கு ரூபா 100 உம் சேவைக் கட்டணமாக ரூபா 10,000 உம் ஆக கட்டணம் அறவிடப்பட்டிருந்ததுடன் இது தொடர்பான கணக்காய்வுப் பரிசோதனையின் போது தீயணைப்பு வாகனம் வழங்குவதற்காக அறவிட வேண்டிய ரூபா 179,100 தொகையான நிலுவைப் பணம் 2014 பெப்ரவரி 20 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்குரிய நிலுவையும் அந்த நிலுவைப் பணத்தில் காணப்பட்டது.

### 2.2.8 வழக்குத் தொடரப்பட்டுள்ள வருமானம்

சபையினால் நிலுவை வருமானம் அறவிடுவதற்காக தொடரப்பட்ட வழக்கிற்காக அறவிடுவதற்குள்ள பணமாக மீளாய்வாண்டின் ஐந்தொகையில் ரூபா 3,797,932 தொகையொன்று காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.2.9 தங்காலை தன வைத்தியசாலையில் வைத்தியசாலை சுத்திகரிப்பு சேவைக்குரிய வருமானம்**

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வைத்தியசாலை சுத்திகரிப்பு சேவை வழங்குவதற்காக ரூபா 3,463,120 தொகை கிடைக்கவேண்டியிருந்தது.

**2.2.10 முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினர்களிடமிருந்தும் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 6,674,101 ஆகக் காணப்பட்டது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

(அ) ஊழியர் கடன்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடவேண்டிய ஊழியர் கடன் ரூபா 183,626 ஆகும். சேவையை விட்டுச் சென்ற மற்றும் மரணித்த ஊழியர்களின் கடன் மீதியில் அவர்களின் பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் தற்போது சேவையில் ஈடுபட்டிருக்கின்ற இரண்டு ஊழியர்களிடமிருந்தும் ஆசிரிய சேவைக்கு மாற்றலாகிச் சென்ற பெண் உத்தியோகத்தரிடமிருந்தும் அறவிடவேண்டிய ரூபா 85,363 கூட்டுத்தொகையானது கணக்காய்வுத் திகதியான 2014 பெப்ரவரி 20 ஆந் திகதி வரையிலும் அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) தகைமைச் சான்றிதழ் விநியோகிக்காமை

1986 மார்ச் 10 ஆந் திகதிய 392/9 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 1986 இன் நகர அபிவிருத்தி அதிகாரசபை (திட்டமிடல் மற்றும் கட்டிடம்) கட்டளை இலக்கம் 07 இல் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் சபையினால் நிர்மாண நடவடிக்கைகள் அங்கீகரிக்கப்பட்ட கட்டிடத்தின் திட்டத்திற்கான நிர்மாணித்தல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் மேற்பார்வை நடவடிக்கைகளை மேற்கொண்டு தகைமைச் சான்றிதழ் விநியோகிப்பதற்கு அல்லது காலத்தை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டிய போதிலும் 2011 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட 37 திட்டங்களுக்கும், 2012 ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட 36 திட்டங்களுக்கும், 2013 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட 13 திட்டங்களுக்கும் உரியதாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சம்பள படி நிலையின் படி சம்பளம் செலுத்தாமை

சாரதி, பாதுகாவலர் மற்றும் நூலக உதவியாளர் பதவிகளுக்குரியதாக ஒன்பது ஊழியர்களுக்கு 2006 ஏப்ரல் 25 ஆந் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 6/2006 ஆம் இலக்கத்தின் படி நாளாந்த சம்பளத்தின் அடிப்படையில் சம்பளம் செலுத்தாமையினால் ரூபா 53,069 குறைவாகவும் அதிகரித்தும் ஆண்டின் போது சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தன.

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

**3.2.1 முற்பணம்**

2011 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்ட ரூபா 653,838 தொகையான முற்பணத்தைத் தீர்ப்பதற்கு 2014 ஆகஸ்ட் 08 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2.2 முறையற்ற கொடுக்கல், வாங்கல்கள்

நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 159(ஊ) இன்படி உறுப்பினர்களின் வீட்டுகளுக்கு உத்தியோகபூர்வ தொலைபேசி வசதிகளை வழங்குதல் மற்றும் பராமரிக்கும் வகையில் சபையினால் செய்யப்படுகின்ற சகல செலவினங்களையும் செய்ய முடியும் என காண்பிக்கப்பட்டிருந்தும் கட்டளைச் சட்டத்தின் பிரிவுகளுக்கு முரணாக 2011 மே 30 ஆந் திகதிய 5.3 ஆம் சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் தலைவரின் வீட்டில் PEO TV இணைப்பு மற்றும் இணைப்புக் கிரயமான ரூபா 15,653 தொகை சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தமை அதிகரிக்கப்பட்டது.

### 3.2.3 வெளிநாட்டு சுற்றுலாவிற்காக கொடுப்பனவு செய்தல்

இலங்கையின் உள்ளூராட்சி நிறுவனங்களின் ஒன்றியைந்த தேசிய இணைப்பாளரின் 2013 மே 28 ஆந் திகதிய கடிதத்தின் படி சமாதானத்திற்காக நகராதிபதிகளின் 8 ஆவது உச்சி மாநாடு 2013 ஆகஸ்ட் 03 ஆந் திகதியிலிருந்து ஆகஸ்ட் 06 வரை ஜப்பானில் நடாத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக தலைவர் பங்குபற்றியிருந்தார். இந்த மாநாட்டில் பங்குபற்றுவதற்காக நிதி, திட்டமிடல் அமைச்சுச் செயலாளரின் 2010 ஒக்தோபர் 01 ஆந் திகதிய நி.தி.அ. 1/2010/1 ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி இணைந்த மற்றும் அமையக் கொடுப்பனவாக செலுத்தக்கூடிய தொகை ரூபா 352,566 ஆக இருந்த போதிலும் ரூபா 401,302 தொகை செலுத்தப்பட்டமையால் ரூபா 48,736 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.3.1 விளைவற்ற சொத்துக்கள்

இல. SPRS 1405 JCB 3CX Sitemaster என்ற வகையில் பெகோ லோடர் இயந்திரம் 2009 ஆம் ஆண்டு முதல் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது விளைவற்றுக் காணப்பட்டது.

## 3.4 ஒப்பந்த நிருவாகம்

சுனாமிக்குப் பின் கரையோரத்தைப் புனரமைத்தல் மற்றும் வள முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் மற்றும் சுனாமிக்குப் பின்னரான ஜீவனோபாய உதவி ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் (IFAD செயற்திட்டம்) கீழ் தங்காலை நகரசபை அதிகாரப் பிரதேசத்தில் கடற்றொழில் ஓய்வுக் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 178 இலட்சம் செலவிடப்பட்டிருந்தது.

i. இந்த நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் 2014 பெப்ரவரி 20 ஆந் திகதி வரையிலும் அது பொது மக்களுக்கு உரித்தாக்கப்பட்டிருக்கவில்லை.

ii. தலைவரினால் 2013 நவம்பர் 28 ஆந் திகதி அனுப்பப்பட்ட பதில் கடித்தில் 2013 திசெம்பர் மாதத்தின் போது இந்த ஓய்வு மண்டபம் மக்கள் உரித்திற்கு உள்ளாக்கப்பட்டதாக தலைவர் எனக்கு அறிவித்திருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 சுற்றாடல் பிரச்சினைகள்

சபைக்குச் சொந்தமான தகனக்கூடம் பாவனைக்கு எடுப்பதற்கு முடியாதிருந்தமையும் வெதுப்பகத்திலிருந்து புகை பரவியமையும், அருகிலுள்ள வீடுகளிலுள்ளவர்களுக்கு இடையூறாக இருந்தமையும் காண்பிக்கப்பட்டு தகனக் கூடப் பொறுப்பாளர் 2013 பெப்ரவரி 07 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் சபைக்கு அறிவித்திருந்தார். சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தரும், பொது சுகாதார பரிசோதகரும் இந்த தகனக் கூடத்தை செயற்படுவது பொருத்தமற்றது என சுட்டிக் காட்டியிருந்தனர். மேற்கூறப்பட்டவாறு ஆபத்துடன் கூடியதாகக் காண்பிக்கப்பட்டிருந்தும் தகனக்கூடத்தில் பெப்ரவரி முதல் ஒக்தோபர் மாதம் வரை 15 தகனக்கிரியைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

2013 ஆம் ஆண்டின் பாதீடு செய்யப்பட்ட நிதியேற்பாட்டிற்கும் உள்ளபடியான செலவினங்களுக்குமிடையே முரண்களின் சதவீதம் உயர் அளவில் அவதானிக்கப்பட்டதுடன் அதன் பிரகாரம் பாதீடு வினைத்திறனான கட்டுப்பாட்டுக் கருவியாக ஈடுபடுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்படவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) வாகனக் கட்டுப்பாடு
(ஈ) பதவியணியினர் முகாமைத்துவம்